
Regd. No M. 2475. JUNE 1931. Vol. VI—No. 6.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதருஸ்.

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | புதிய வருஷ பஞ்சாங்கம். | 81 |
| 2. | மதுவிலக்கு முயர்ச்சி சம்பந்தமாக ஓர் ஸம்பவம். | 84 |
| 3. | நெல்லுற்பத்தியும் நமது தேச க்ஷேமமும். | 84 |
| 4. | இலவமரம். | 86 |
| 5. | சென்னைச்சட்ட சபையில் வியவஸாய, கூட்டுறவு, மாடு வைத்தியம் முதலிய இலாகாக்களுக்கு செலவு திட்ட சம்பந்தமாக விவாதம். | 88 |
| 6. | வர்த்தமானக் குறிப்பு. | 91 |
| | ...கப் பயிற்சியும், குழந்தையின் கல்வியும். | 97 |


எடிடர் & மானேஜர்.
ஏ. சுவாமிநாதய்யர், பி. ஏ.

JL
Y31m2, N26
N31-6-6
199404

## செவிட்டுத்தன்மை

மண்டை இடி, தலைவலி முதலியவை சுவஸ்தமாகும்.

### நூதனமான மேநாட்டு மருந்து

# லார்மலீன்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

லார்மலீன் என்னும் இம்மருந்தை வீடுகளில் வேறு அதிகப்பணச்சிலவு இல்லாமல் மிகவும் சுலபமாக உபயோகிக்கக்கூடியது. இக்களிம்பு, நோய் உள்ள இடங்களில் தடவிய மாத்திரத்தில் வலியைப் போக்கும் தன்மையுள்ளதாயிருக்கிறது

இதற்கு அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களும் கிடைத்திருக்கின்றன.

### நம்பிக்கையுள்ள நற்சாக்ஷிப் பத்திரம்.

கிரைடன் நகரம், ஒயிட் ஹார்ஸ் ரோட்டிலுள்ள ஸ்ரீமதி E. குரோ எழுதுவதாவது:—"தாங்கள் எனக்கு அனுப்பிய சிறிய டின் லார்மலீன் களிம்பு என்னை என் கஷ்டத்தினின்றும் நீக்கி, என் தலைவலி, மண்டை இடி முதலியவைகளைச் சாந்தப்படுத்தி என்னைச் சந்தோஷிக்கச் செய்தது. அதிகச் சிலவு செய்தும் குணமாகாமல், கடைசியில் தங்களால் குணமடைந்ததற்கு நான் தங்களுக்கு நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்".

இன்றைக்கு ஒரு புட்டியை உபயோகித்துப் பாருங்கள். மூன்று ரூபாய் மணியார்டர் செய்தால் எல்லா விலாசத்திற்கும் அனுப்பப்படும்.

விலாசம்:—

**ஆரல் மெடிகேஷன் பிர்க்பெக் ரோட்டு,**
**பெக்கன்ஹேம், இங்கிலாந்து.**

*Address Orders to:—*

**AURAL MEDICATION, BIRKBECK ROAD,**
**Beckenham, Eng.**

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

ஆனரரி எடிடர், மானேஜர்:—

எ. ஸ்வாமிநாதய்யர், B. A. ரிடயர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ் : மைலாப்பூர் : மதராஸ்.

வால்யூம் VI. 1931ஞு ஜூன்மீ நெ. 6

## புதியவருஷ பஞ்சாங்கம்.

வருஷப்பிறப்புப்பண்டிகையானது எல்லா மதஸ்தர்களாலும் கொண்டாடப்படுகிறது. அப்பண்டிகை தினத்தில் எல்லா மதஸ்தர்களும் புதிய வருஷத்தில் ஜனங்கள் நோயில்லாமலும், சுகமாகவும், செல்வத்துடனும் வாழவேண்டுமென்றும், அவர்களுக்கு யாதொரு தொந்திரவும் வரக்கூடாதென்றும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொள்வது வழக்கமாயிருக்கிறது. கிராமங்களிலெல்லாம் ஹிந்துக்கள் புரோஹிதர்களை புதிய வருஷத்தில் பயிர் பச்சைகள் எவ்வாறு பயன்படுமென்றும், ஜனங்களின் க்ஷேமசுசங்கள் எப்படியிருக்குமென்றும் பஞ்சாங்கத்தைப் படிக்கச்சொல்லிக் கேழ்ப்பார்கள். ஒவ்வொரு வருஷத்திற்கும் நவக்கிரஹங்களில் ஒன்று அரசனாக ஏற்படுகிறது. அப்படியே, பிரதானமந்திரியாகவும், சேனாபதியாகவும் பாசன, வியவஸாய, வர்த்தக வியாபார மந்திரிகளாகவும் மற்ற கிரஹங்கள் அமைகின்றன. ஒரு கிரஹமே இரண்டு, மூன்று இலாகாக்களுக்கு அதிபதியாகவுமிருக்கலாம். நவக்கிரஹங்களின் மொத்த பொது ஆட்சியால் பிரஜோத்பத்தி வருஷத்தில் உண்டாகக்கூடிய பயன்களை விவரிக்கிறோம். பிரஜோத்பத்தி வருஷத்தில் சுக்கிரன் அரசன். சுக்கிரன் நவக்கிரஹங்களுக்கு அரசனாக ஏற்படுவது சாதாரண சம்பவமல்ல. சுக்கிரன் சாந்த குணத்தையும், கலகலப்பான தன்மையையுமுடையவன்' மேலும் கல்வியையும் சங்கீதம் முதலிய கலைகளையும் அப்பியஸிக்கிரவன். ஆகையால் அவனுடைய ஆளுகையில் ஜனங்கள் சுகமாகவும், சந்தோஷமாகவுமிருப்பார்கள். பயிர்கள் நன்றாய் வளரும், தானியங்கள், அதிகமாக விளையும். பிரஜைகள் ஒருவருக்கொருவர் உபயோகமாக

வும் ஸ்நேகத்துடனுமிருப்பார்கள். கெடுதிசெய்ய உத்தேசிக்கிறவர்கள் நாசத்தையடைவார்கள். சுக்கிரன் சந்திரனைத் தனக்குப் பிரதான மந்திரியாகவும், சேனாதிபதியாகவும், அரிசி, கோதுமை, துவரை, பயறு முதலிய தானியப்பயிர்களுக்கு அதிபதியாகவும் நியமித்திருக்கிறான். சந்திரனுடைய ஆட்சியால் பால், தயிர், வெண்ணை, சுக எண்ணைகள் முதலியவைகளெல்லாம் ஏராளமாக உற்பத்தியாகும். அவன் மேகங்களுக்கு அதிபதியாக விருப்பதால் மழை நன்றாய் பெய்யும். ஆறுகளில் வெள்ளம் ஓடும். குருவானவர் பயிரேறிய கழனிகளுக்கும், பாசனத்திற்கும் அதிபதியாகிறார். ஆகையால், பயிர்கள் அவைகளுக்கு வேண்டிய பாசனநீரை அடையும், பயிர் கெட்டுப் போகும்படியான அதிக நீரையும் அவைகள் அடையா. குரு, பொன், வெள்ளி உலோகங்களுக்கும், நவரத்தினங்களுக்கும், முத்து, பவழம் முதலியவைகளுக்கும் அதிபதியாகிறார். ஆகையால், மேற்கூறிய பொருள்கள் மலிவாய்க்கிடைக்கும். புதனுடைய ஆட்சியால் பச்சை நிறமான தானியங்களும், பருப்புதானியங்களும் அதிகமாக விளையும். கல்வியும் எல்லாவித கலாஞானங்களும் அபிவிருத்தியாகும். ஆனால் சனியானவர் சுக்கிரனும் சந்திரனும் செய்கிற முயற்சிகளுக்கு நேர்விரோதமாகவே இருப்பான். சென்ற வருஷத்தில் அவனுடைய பிதாவாகிய சூரியன் பிறதான மந்திரியாக விருந்தான். இவ்வருஷத்தில் அவன் தன்னுடைய பிள்ளையாகிய சனியோடுசேர்ந்து கொண்டு சுக்கிரன் சந்திரன் முதலியவர்கள் செய்யும்நல்ல முயற்சிகளுக்கு எதிரியாக விருந்து கொண்டு கெடுதலைச் செய்வான். ஆனபோதிலும், பிரஜோத்பத்தி வருஷத்தில் ஜனங்கள் சண்டையில்லாமல் ஸ்நேகமாகவே இருப்பார்கள், காலமழைகள் பெய்யும். ஆறுகளில் ஜலம் நிரம்பப்போகும், தானியங்கள் நன்றாய் விளையும், விலைகள் குறைவாக விருக்கும். ஆனால் சிலப்பிரதேசங்களில் வெள்ளத்தினால் பயிர்களழிந்துபோகும். ஜனங்களிற்கு நோய்களும் ஏற்படும்.

புதிய வருஷத்தில் பிரஜைகளுக்குப் பல நன்மைகள் ஏற்படும் போலக் காண்கிறது. சென்ற வருஷத்தில் நமது தேசத்தின் செல்வநிலை குறைவாயிருந்தது. 1929-30-ம் வருஷத்தில் நமது தேசத்து இறக்குமதிகளின் மதிப்பு 240 ரூபாய்கள். நாம் நம்முடைய தேசத்தில் நம்முடைய ஜனத்தொகையைக் கொண்டு இப்பொருள்களை உற்பத்தி செய்யாமல் இவ்வளவு பெருந் தொகையை அந்நிய நாட்டு ஜனங்களுக்கு அநுப்பினோம். நம்முடைய ஜனத்தொகை பட்டினியாய்க் கிடக்கின்றது. அவர்களைத் தொழில்களில் பயிர்ச்சி செய்வதற்குக் கூட பணமில்லை. நாம் 45 கோடி ரூபாய்கள் பெறுமான உணவு தானியங்களை அந்நிய நாடுகளுக்கு அநுப்பினோம். 162 கோடி [illegible] தொழிற்சாலைச் சரக்குகளையும் அநுப்பினோம், நாம்



ஏன் இவைகளை நம்முடைய தேசத்திலேயே வைத்துக்கொண்டு பல தொழில்களையும் அநுஷ்டித்து அவைகளால் உண்டாகும் பயன்களை நமது 35 கோடி ஜனங்களும் அடையும்படிச் செய்யக்கூடாது? நம்முடைய ஜனத்தொகையில் படித்தவர்கள் கவர்மெண்டு உத்தியோகத்திற்காக பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்களே. அல்ப சம்பளங்களுக் காகத்தானே இவ்விதமாக ஒருவர் மேல் ஒருவர் விழுந்து போகிறார்கள். நமது தலைவர்களோ கவுன்சில்களில் பிரதிநிதித்தவத்திற்குப் பாடு படுகிறார்கள். என்னாம் எல்லோரும் நம்முடைய ஜனத்தொகையில் தீண்டா வகுப்பினர்களென்கிற 10 இலக்ஷம் பெயர்களின் க்ஷேமத்தை சரிவர கவனிக்கிறதில்லை. உலகத்திலேயே ஜன பலம் அதிகமாகவிருக்கிற தேசம் நம்முடைய தேசம் தான். நம்முடைய ஜனத்தொகைக்கு ஜீவனோபாயங்கள் போதவில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஜனத்தொகையில் 100இல் 80 பெயர்களுக்கு வருஷத்தில் பூராவாக 5 மாத வேலை கூட இல்லை. தொழிலாளிகளும் மற்ற தேசங்களில்ப்போல் தினந்தோறும் போதுமான வேலையைச் செய்கிறதில்லை. இக்காரணங்களினால் நம்முடைய ஜனங்கள் சிலர் அரைவயிறு சாப்பாட்டை அடைகிறார்கள். அவர்கள் வலிமையில்லாமலும், நோய்களோடுமிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் சாகுபடிக்கு ஏற்றவைகளான நிலங்களின் மொத்த விஸ்தீர்ணம் 432 ஏகர்கள். அதில் நாம் பாதியைத்தான் பயிர் செய்கிறோம். எல்லா நிலங்களிலும் பிரதிவருஷமும் இரண்டுதரம் பயிரேத்தி அறுவடை செய்யலாம். ஆனால் நாம் அநேக ஸ்தலங்களில் ஒருதரம் தான் பயிரேத்தி அறுவடை செய்கிறோம். ஆகவே நாம் பூமியிலிருந்து அடையக்கூடிய இன்னும் இரட்டிப்பு வரும்படியை அடைகிறதில்லை.

உலோக உற்பத்திஸ்தலங்களில் $\frac{3}{4}$ பங்கு ஸ்தலங்களை நாம் உபயோகிக்கிறதில்லை. அவைகளால் நமக்கு வரக்கூடிய வரும்படியில் $\frac{3}{4}$ பங்கு வருகிறதில்லை. நாம் நம்முடைய நீர் வீழ்ச்சிகளால் அடையக்கூடிய மின்சாரம் முதலிய சக்தி மொத்தத்தில் 100 இல் ஒரு பங்கைத்தான் அடைகிறோம். சுவிட்ஜர்லாந்தில் 100 இல் 72 பங்குகளை அடையப்படுகிறது, ஜர்மனியில் 55 பங்கு அடையப்படுகிறது, 47 பங்கு ஜபானிலும் பிரான்சிலும் அடையப்படுகிறது.

நம்முடைய தலைவர்கள் ஏன் இன்னமும் தூங்குகிறார்கள். இனியாவது அவர்கள் விழித்துக்கொண்டு முயற்சிகளைக் கைக்கொண்டால் தான் நம்முடைய ஜனத்தொகைக்கு வயிறுநிறம்ப உணவும், உடையும் தேகஆரோக்கியமும், கிடைக்கும். தேசமும் நல்ல செல்வத்தில் அமைந்து உலகத்துக்கே உதவும்.

## மதுவிலக்கு முயர்ச்சி சம்பந்தமாக ஓர் ஸம்பவம்.

திருச்சிஜில்லா லால்குடியில் நெல் ஆலையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தாங்கள் மதுபானஞ் செய்கிறதில்லையென்கிற வைராக்கியத்தைக் கைக்கொண்டு அந்நியமதத்தை மீறிக்குடிப்பவர்களைக் கழுதையின் மீது வைத்து ஊர்வலம் விடுவதென்று கட்டுப்பாடு செய்திருந்தார்கள். இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதிக்காதவர்களை வேலையிலிருந்து விலக்கினார்கள். ஒப்பந்தத்தில் கட்டுப்பட்டிருந்த ஒருவர் திருட்டுத்தனமாய்க் குடித்தார். அவரை சம்மதியின் பேரிலேயே அவர்கள் கழுதையின் மேல் ஏற்றிக் "கள், சாராயம் முதலிய வற்றைக்குடிக்காதீர்கள் பொருளையுமிழந்து அறிவையுமிழக்காதீர்கள் குடியினால் நீங்கள் அறிவுமயங்கி, கழுதைகளிலும் கேடுகெட்ட கழுதைகள் ஆவீர்கள்" என்கிற வாக்கியங்களையுடைய அட்டைகளை எடுத்துக்கொண்டு அமைதியாகவே ஊர்வலம் வந்தார்கள்.

## நெல்லுற்பத்தியும் நமது தேச க்ஷேமமும்.

வியவஸாய இலாகாவின் தலைவர் மிஸ்டர் ஹில்ஸன் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.

நமது மாஹாணத்தில் பயிர் பூமிகளின் மொத்த விஸ்தீர்ணம் கிட்டத்தட்ட மூன்று கோடி 90 இலக்ஷம் ஏகர்கள். நெல்ப்பயிர் பூமிகளின் மொத்த விஸ்தீர்ணம் 1 கோடி 10 இலக்ஷம் ஏகர்கள். நெல்பயிர் பூமிகளிலும் சேற்றுப்பயிர் பூமிகளின் மொத்த விஸ்தீரணம் 80 இலக்ஷம் ஏகர்கள். நெல்ப்பயிர் பூமிகளில் மாறுதலில்லாமல் பிரதி வருஷமும் நெல்பயிரே அப்பியஸிக்கப்படுகிறது. சேற்றுப்பயிர் பூமிகள் அதிகமாகவிருக்கின்றன. அவைகள் மேல் மேலும் அதிகமாகின்றன. சேற்றுப்பயிர் பூமிகளில் நீரானது 3,4 அங்குல ஆழம் வரையில் கொஞ்சம் ஓட்டமாகவே எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. சேற்றுப்பயிருக்கு இவ்விதமாக நீர் உபயோகிக்கப்படுவதில் மற்றப்பயிர்களுக்கு நீரே போதாமல் போகிறது. மேலும், அநேகப்பயிர்களுக்கு வெகு குறைந்த அளவில் நீர் வேண்டியிருக்கிறது. அந்த அளவு நீர் கூட அவைகளுக்கு அகப்படுகிறதில்லை. மழை இல்லாத காலத்தில் பாசனத்திற்காக ஜலாசயங்களிலிருக்க வேண்டிய நீரின் அளவு குறைவுபட்டுப்போகிறது. நம்முடைய தேசத்தில் மழைக்குறைவுகள் ஏறக்குறைய எல்லாவருஷங்களிலும் நேரிடுகின்றன. அது காரணம்பற்றியே பயிர்களின் விளைச்சல் குறைவுபடும்; ஆகையால் அவ்வித சம்பவம் ஏற்படாதிருக்கவேண்டிய நிமித்தம் ஜலாசயங்களில் வேண்டிய அளவில் நீர் இருக்கவேண்டும். நெல் சாகுபடியாகிற பூமிகளில் இதர பயிர்கள் வளரமாட்டா. ஆகவே, வியவஸாயிகள் நெல்ப்பயிரையே அநுஷ்டிக்கவேண்டியிருக்கிறது. சேற்றுப்பயிர் பூமிகள் வேறொரு விதப்பயிர்களுக்கும் உதவுகிறதில்லை. நெல்ப்பயிரில், அதுவும் சேற்றுப்பயிரில், வியவஸாயிகள் அதிக கஷ்டப்பட வேண்டியதில்லையாதலால் அவர்கள் அப்பயிரையே பின்பற்றுகிறார்கள்; ஆகவே, அவர்கள் அதிக வரும்படிகளைக் கொடுக்கக்கூடிய இதரபயிர்களை அநுஷ்டிக்கிறதில்லை. நெல்ப்பயிர் பூமிகளில பயிர் அறுவடையாகும் வரையில் மாடுகள் மேயமுடியாது. கிராமங்களில் மேய்ச்சலுக்கு வேறு போதுமான பூமிகளுமில்லை. ஆகையால், மாடுகள் தூரத்திலுள்ள காடுகளுக்கு அநுப்பப்படுகின்றன. அவைகள் செல்லும்பொழுது நோய்களையடைகின்றன, அந்நோய்களையும் பரவச் செய்கின்றன; இக்காரணத்தினால் மாட்டுமரணங்கள் அதிகரிக்கின்றன. மாடுகளின் தேக வலிவும் ஆரோக்கியமும் குறைவதால் அவைகளின் கறவை சக்தி குறைகிறது.

பசுமாடுகளின் கறவைசக்தி குறைவுபடுவதால் எருமையை ஜனங்கள் உபயோகிக்கத்தொடங்குகிறார்கள். பசுமாடுகளை யபிவிருத்தி செய்வதையே விட்டுவிடுகிறார்கள். சேற்றுப்பயிருக்கு அழுகியிராத புதிய தழை எருவு வேண்டியிருக்கிறபடியால் அவ்வெருவிற்காகக் காடுகள் அழிக்கப்பட வேண்டியிருக்கின்றன.

நெல்பயிருழியர்களுக்கு நடவானபிறகு அறுவடைவரையில் பயிர்நிலத்தில் வேலையேயில்லை. நடவு காலத்திலும் அறுவடைகாலத்திலும் அவர்கள் நிறப்ப உழைக்க வேண்டியிருக்கிறது. இவைகளினிடையில், அவர்களுக்கு வேலையேயில்லையாதலால் வேறுவேலையைத் தேடுவதற்காக அவர்கள் பலவிடங்களிலும் கூட்டம் கூட்டமாக திரிகிறார்கள். அவர்கள் அப்படிச்செய்வதால் பொதுஜன ஆரோக்கியத்திற்குக் கெடுதிவிளைகிறது. நம்முடைய ஜனத்தொகைக்குப் போதுமான வேலை நெல் சாகுபடியால் கிடைக்காது. மேலும், நெல் சம்பந்தமாக வேறு வரும்படிகளைக்கொடுக்கக் கூடிய வேலைகளுமில்லை. ஜனத்தொகையில் நெல்ப்பயிரை அநுஷ்டிக்கிறவர்கள் தவிர மற்றவர்கள் வேலைக்காக அந்நிய நாடுகளுக்குப்போக வேண்டியதாகவுமிருக்கிறது. சேற்றுப்பயிரில் நீர் அதிகமாக உபயோகிக்க வேண்டியதாக விருப்பதால் மேட்டு நிலங்களில் பாசனநீர் எட்டாததாகையால் ஜனங்கள் கிராமங்களில் மேட்டு நிலங்களை வெட்டிக் கழித்து விடுகிறார்கள். கிராமங்களில் வீடுகள் மாத்திரம் உயர்ந்த நிலத்திலிருக்கின்றனவே யொழிய சுற்றுப்புற நிலங்களெல்லாம் பேடுகளாக்கப்பட்டுத் தாழ்ந்த மட்டத்தில் இருக்கின்றன. கழனிகளில் நீரிருப்பது வீடுகளின் அடிமட்டத்திற்கு சமமாக விருக்கிறது. எங்கே பார்த்தாலும் நீர் தேங்குகிறது. ஆடுமாடுகள் மேய இடமேகிடையாது கொசுவும் ஈயும் அதிகமாகி நோய் மூலங்களை உண்டாக்குகின்றன.

நெல்லானது நம்முடைய ஜனத்தொகையின் உபயோகத்திற்கு வேண்டிய அளவிற்கு மேல்பட்டு அதிக அளவில் விளைக்கப்படுகிறது.

நெல் சாகுபடி குறைக்கப்படவேண்டும், பழவகைப் பயிர்களும், தொழில்ச்சாலைச் சரக்குப் பயிர்களும் பால், பால்பொருள்கள் முதலியவைகளின் உற்பத்தியுமதிகமாக வேண்டும். நெல்ச்சாகுபடிக்கு உபயோகிக்கப்படும் நீரில் சிறிதுபாகம் மேற்கூறிய பயிர்களுக்கும் தொழில்களுக்கும் உபயோகிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய ஜனத்தொகையில் பெரும்பாகத்திற்கு ஜீவனோபாயமேற்படும், நமது தேசத்து உற்பத்திகள் அந்நிய நாடுகளில் வியாபாரமாகும். நமது தேசத்தின் செல்வம் விருத்தியாகும்.

## இலவமரம்.

### பஞ்சாயத்து பாரெஸ்டுகளில் அநுஷ்டிக்கப்படக்கூடிய பயிர்.

இலவம் பஞ்சு இலவங்காயின் கோட்டைகளின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் வழ வழப்பும் மிருதுவுமான வெண்மையான மயிர். இம்மயிர்கள் குட்டையாக விருப்பதாலும், எளிதில் அறுந்து போகக்கூடியவைகளாதலாலும், அவை நூல் நூற்கவும் வஸ்திரங்களாக நெய்யவும் உதவா. அவைகள் மெத்தைகளுக்கும், தலையணைகளுக்கும் நன்றாய் உதவுகின்றன. பருத்தியைப் போட்டு நிறப்பினால் மெத்தைகளும் தலையணைகளும் மிருதுவாக விருமல் கெட்டி தட்டிப் போகிறது போல இலவம் பஞ்சால் நிறப்பப்பட்டவைகள் அடை தட்டி கெட்டியாகாமல் மிருதுவாகவும், ஸ்பிரிங்கு போட்டவைகள் போலும், நாம் படுக்கும் பொழுது வேண்டிய அளவு அமுங்கி நாம் எழுந்தவுடனே முன்போலவே உயரும். ஆகையால், படுக்கிற வர்களுக்குச் சுகநித்திரை உண்டாகும். ஆகவேதான், ஔவையார் தனது மூதுரையில் "இலவம் பஞ்சுற்றுயில்" எனக் கூறியிருக்கிறார்கள். இலவு ஏழைக்குடிகளுக்கு கஷ்டமில்லாமலும் பணச்செலவில்லாமலும் தானாகவே வளர்ந்து காய்த்து தப்பாமல் பணத்தைத்தரக்கூடிய பயிர். இலவமரம் வெகு அழகானது. அது 75 அடிவரையில் உயர்ந்து கொண்டே போகும். விரை போட்டு 5 வருஷங்கள் கழிந்ததும் காய்க்க ஆரம்பிக்கும், 50 வருஷங்கள் வரையில் கூட எருவில்லாமலும், மழைநீர் உதவியோடு மாத்திரமும் காய்க்கும். வஸந்தகாலத்தில் இலைகள் உதிர்ந்துபூக்கள் நிறைந்திருக்கும். இம்மரம் எல்லா உஷ்ணநாடுகளிலும், மிதஉஷ்ணநாடுகளிலும் பயிராகிறது. இதற்கு அதிக மழை வேண்டியதில்லை மழை குறைந்த கர்நூல் ஜில்லாவில் நல்லமலைக்காடுகளில் இரண்டு மூன்று ஜாதி இலவுகள் வளர்கின்றன. எல்லாவித மண்களிலும் இலவுவளரும். ஆனபோதிலும், மழை குறைந்த வரண்ட காடுகளும் சிறுகற்கள் நிறைந்த செவ்வல் நிலங்களும் இப்பயிருக்கு மிகவும்



திறமானவை. மழை அதிகமாயுள்ள நாடுகளில்கூட, துருக்கல் நிலங்களில் கூட இலவமரங்கள் நன்றாய்வளருகின்றன. ஆனால், கர்நூலில் வளர்ந்துகாய்ப்பது போல் இலவு மலையாளம் முதலிய பிரதேசங்களில் வளர்ந்து காய்ப்பதில்லை.

இலவமரத்தை விரைபோட்டே சாதாரணமாய் வளர்க்கிறார்கள்: காடுகளில் மரத்திலிருந்து காய் வெடிக்கும்போதே விழும் விரைகள் தானாகவே முளைத்து வளர்கின்றன, விரைகள் போட்டபின் ஒரு வாரத்திற்குள்ளேயே முளைகள் கிளம்பும். நாற்று விட்டுப்பிடுங்கி நட்டால் இலவு நன்றாய் வளராது. ஆகையால் 10,12 அடி தூரத்திற்கு ஒன்றாகக் குழிகளைத்தோண்டி ஒவ்வொன்றிலும் இரண்டு விரைகளை மழைகாலமாரம்பிக்கு முன் போடவேண்டும். அவைகள் முளைத்தபிறகு, நன்றாய் வளர்ந்து வரும் செடியை மாத்திரம் வளரவிட்டு மற்றொன்றைப்பிடுங்கி எறியவேண்டும். ஒவ்வொரு குழியும் 3அடி சதுரமும், மூன்று அடி ஆழமாக விருக்கவேண்டும். வெஸ்ட் இண்டீஸ் தீவுகளில் சில நல்ல ஜாதி மரங்கள் பேர்த்து நடப்பட்டு வளர்க்கப்படுகின்றனவாம். அவைகள் இரண்டு வருஷங்களுக்குள்ளேயே காய்க்கின்றனவாம். இலவமரத்தில் சிகப்புப்பூ ஜாதிகள் இரண்டும், மஞ்சள் பூ ஜாதி ஒன்றுமிருக்கின்றன. சிகப்பு ஜாதிகளில் ஒரு ஜாதி மரங்களின் மேல் முள்ளு இருக்கும், மற்றொன்றில் முள் இராது. மற்றும் சில ஜாதிகளில் பஞ்சு வெள்ளையாயும் சில வற்றில் மஞ்சளாயும், சிலவற்றில் சென்னிறமாகவும் இருக்கும். மெக்ஸிகோவில் வளருகிற பஞ்சைத்தான் மேநாட்டு தேசங்களில் அதிக விலையைக்கொடுத்து வாங்குகிறார்கள். மெக்ஸிகோ பஞ்சு வெகு மிருதுவானது. நம்முடைய தேசத்தில் முள்ளுள்ள இலவம் பஞ்சுதான் திறமானதாகக் கொண்டாடப்படுகிறது. மஞ்சள் இலவின் பூவும் பிசினும் நோய்களுக்கு நல்ல மருந்து.

இலவு விரை போட்ட 6-ம் வருஷம் முதல் தான் அநேக இடங்களில் காய்க்கின்றது. 8-4 வருஷம் முதல் ஒவ்வொரு மரத்திலும் 500 முதல் 1000 காய்கள் காய்க்கும். இக்காய்கள் ஜூன் மாதங்களில் முற்றிவருகின்றன. காய்களை அவைகள் உலர்ந்து வெடிக்குமுன்பே இறக்கி விடவேண்டும் மரத்திலேயே காய் வெடித்தால் பஞ்சு எல்லாம் காற்றடித்துக் கொட்டிப் போகும். பஞ்சின் காய் முற்றினாலும் அது மற்ற பழங்கள்போல மஞ்சள் நிறத்தையடைகிறதில்லை. அதன் காரணமாகத்தான் "இலவம் காத்த கிளி போல்" என்கிற பழமொழி வழங்குகிறது. ஒவ்வொரு காயிலும் ½ ரூபாய் விரை கொட்டை நீங்கிய பஞ்சு கிடைக்கும். சென்னை மண்ணடியில் பஞ்சு வியாபாரிகள் 100 உலர்ந்த காய்களை 12 அணா வீதம் விற்கிறார்கள்; கொட்டை எடுக்காத பஞ்சு மணங்கு 5 ரூபாய் வீதம் விற்கப்படுகிறது. ஆனால் இதை விரை நீக்கிக் கொட்டியெடுத்தால் மூன்றில் ஒரு பங்கு எடை சுத்தப்பஞ்சு

தான் தேறும். இலவம் கொட்டை ஒரு ரூபாய்க்கு 40 படி வீதம் கிடைக்கும். பிரான்சு தேசத்தில் இலவங் கொட்டைகளை எண்ணையாடுகிறார்கள். 100 வீசைக்கொட்டையில் 20 வீசை எண்ணை உண்டாகிறது. மேனாடுகளில் இலவஎண்ணை உணவில் உபயோகிக்கப்படுகிறது. ஸோப்புகளும் இவ்வெண்ணையைக் கொண்டு செய்யப்படுகின்றன. இலவம்பிண்ணாக்கை மாடுகள் தின்கின்றனவாம். சென்னை துரைத்தனத்தார் தங்களுடைய பண்ணைகளில் பரிசோதித்துப் பார்க்கவேண்டும்.

அமெரிகா ஐக்கிய நாடுகளுக்கு மாத்திரமே 9000டன் இலவம் பஞ்சு ஏற்றுமதியாகிறது. இதன் விலை சுமார் 120 இலக்ஷ ரூபாய்கள். ஜாவா நாட்டிலிருந்து பஞ்சு அதிகமாக வெளிநாடுகளுக்குப் போகிறது. அங்கே 15000 டன்கள் கொட்டை எடுக்காத பஞ்சு விளைகிறது.

இலவம் பிசினால் நீர்ச்சுருக்கு, உள்ஜ்வரம், பேதி முதலிய நோய்கள் நீங்குமெனப்பதார்த்த குணசிந்தாமணியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மொக்கையும், பட்டையையும் வேரையும் பிரமேகம் முதலிய நோய்களுக்கு உபயோகிக்கிறார்கள். சுக்கிலத்தையும் இரஸதாதுவையும் விருத்தி செய்யுமாம். இலவமரத்தின், அடியில், வேர் பரவுமிடத்தில் உள்ள கிணற்று ஜலத்தைக் குடித்தால், அஷ்ட குன்மம், நீரழிவு, இரத்தமற்ற ரணக்கிருமி, உட்சூடு முதலியவைகள் நீங்குமாம். பாரெஸ்டுப் பஞ்சாயத்துக்கள் இலவ மரங்களைக் காடுகளில்ப் பயிர் செய்தால் அவர்கள் நல்ல இலாபங்களை அடைவார்களென்பதில்ச் சந்தேகமில்லை.

## சென்னைச்சட்ட சபையில் வியவஸாய, கூட்டுறவு, மாடு வைத்தியம் முதலிய இலாகாக்களுக்கு செலவு திட்டசம்பந்தமாக விவாதம்.

கனம் பி. டி. ராஜன் வியவஸாய இலாகாவின் செலவிற்காக கவர்மெண்டாருக்கு 18,55,500 ரூபாய்களுக்கு மேல்படாமல் ஒரு தொகை திட்டத்தில் உத்தரவாக வேண்டுமென்று பிரேரிப்பித்தார். ஸ்ரீமான் ஆரோக்கிய ஸாமி முதலியார் சொன்னதாவது: வியவஸாய இலாகாவின் முயர்ச்சிகள் பலமடங்கு அதிகமாக வேண்டும்; ராயல் கம்மிஷனின் தீர்மானங்கள் தவக்கமில்லாமல் கைக்கொள்ளப்பட வேண்டும். திட்டத்தில் வியவஸாய இலாகாவிற்காக பகுக்கப்படப்போகிற தொகை போதவே போதாது. நம்முடைய மாஹாணத்தில் வியவஸாயம்தான் முக்கிய தொழிலாயிருப்பதாலும், கவர்மெண்டார் வியவஸாயிகளிடமிருந்து 8 கோடி ரூபாய்களை நிலவரிப்பணமாக வசூலிப்பதாலும் அத்தொழிலின் நிமித்தம் அவர்கள் 18 இலக்ஷ ரூபாயை திட்டத்தில் பகுத்திருப்பது சரியல்ல. ராயல் கம்மிஷன் பல தீர்மானங்களை



கவர்மெண்டாரை அமுலுக்குக் கொண்டு வரும்படி சிபார்சுசெய்தது, கவர்மெண்டார் அவைசம்மந்தமாக முயர்ச்சிகளை இன்னும் கைக்கொள்ளவில்லை. அவர்கள் மாஹாண ஆராய்ச்சிசபை ஒன்றையும் இன்னும் ஏற்படுத்தவில்லை. வியவஸாய இலாகாவானது இன்னமும் நம்முடைய மாஹாணத்தில் போதுமான எருவிருக்கிறதாவென்று கண்டறியவும், எருவை அதிகப்படுத்த யோசனைகளைச் சொல்லவும் முயர்ச்சிகளைக் கைக்கொள்ளவில்லை. ராயல் கம்மிஷன் புண்ணாக்குகளை எருவாக யுபயோகிக்கவேண்டுமமென்று கூறியிருக்கிறார்களே, அப்படியிருக்கையில் கவர்மெண்டார் ஏன் இன்னம் எண்ணைவிதைகள் நம்முடைய மாஹாணத்திலிருந்து அந்நிய நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்கவில்லை? ஏன் எலும்புகளின் ஏற்றுமதியும் நிறுத்தப்படவில்லை? கவர்மெண்டார் ஒவ்வொரு ஜில்லாவிலும் விடஸாயப்பண்ணைகளை ஸ்தாபிக்கவேண்டும், வியவஸாயிகளுக்கு வியவஸாய விஷயங்களில் போதனைகளும் நிரூபணங்களும் அப்பண்ணைகளில் நடத்தப்படவேண்டும். பழவகைப்பயிர் சம்பந்தமாக ஒரு நிபுணரை நியமிக்கவேண்டும். அந்த நிபுணர் சாதாரண ஜனங்கள் உபயோகிக்கும் பழவகைகளாகிய மாம்பழம், ஆரஞ்சு முதலியவற்றை அபிவிருத்தி செய்வதில் பாடுபடவேண்டும். பாசனத்திற்கு ஊற்றுநீர் உபயோகப்படவேண்டிய வழியில் கவர்மெண்டார் கவனத்தைச் செலுத்தவேண்டும். இராமசந்திர ஏத்தத்தை திரமானதென்று மொழிந்த கவர்மெண்டார் அந்த ஏத்தத்தின் சம்பந்தமாக தக்க ஆதரணையைச் செய்யவேயில்லை. போலீஸ் இலாகாவிற்கு, திட்டத்தில், 2 கோடி ரூபாய்கள் பகுக்கப்பட்டிருக்கையில் வியவஸாய இலாகாவுக்கு 18 இலக்ஷ ரூபாய்கள் பகுக்கப்பட்டிருப்பது ஆச்சரியத்தைத உண்டு பண்ணுகிறது. பாரெஸ்டுகளிலிருந்து வியவஸாயிகள் தக்கபடி எருவிற்காக தழைகளை அடையக் கூடுகிறதில்லை.

ஸ்ரீமான் ஆரோக்கியஸாமி முதலியார் பேசின பிறகு, ஸ்ரீமான் டி. ஏ. இராமலிங்க செட்டியாரும் மிஸ்டர் ஹமீத்கானும், ஸ்ரீமான்கள், ஷெட்டி, டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம். ஏ. மாணிக்கவேலு நாயகரும் பேசினார்கள். அவர்களும் ஏறக்குறைய முதலியார் அவர்களின் அபிப்பிராயத்தையே ஒப்புக் கொண்டார்கள்.

பிறகு, கனம் பி. டி. இராஜன் மாட்டு வைத்திய இலாகாவுக்கு 11,50,900 ரூபாய்கள் திட்டத்தில் பகுக்கப்பட வேண்டுமென்று பிரேரேபித்தார். ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியார் அவர்கள் சொன்னதாவது. நம்முடைய மாஹாண க்ஷேமத்திற்கு முக்கியமாகிய மாட்டு வைத்திய சம்பந்தமாக கவர்மெண்டார் 11 இலக்ஷ ரூபாய்களைப் பகுக்க உத்தேசிப்பது சரியல்ல. இராயல் கம்மிஷனின் தீர்மானத்தின்படி மாட்டு வைத்திய இலாகாவில் உத்தியோகஸ்தர்களின் சங்கியை அதிகரிக்கப்பட வேண்டும்; நான் ஆர்

திர தேசத்தில் எகனமிக் என்குவைரி கம்மிட்டி அங்கத்தினராக பிரயாணஞ் செய்தபோது வியவஸாயிகள் மாட்டு நோய்கள் அங்கே அதிகமாயிருந்தனவென்றும், மாட்டு வைத்திய இலாகாவின் உதவி வெகு அல்பமாயிருந்ததென்றும், மாடுகள் 100க்கு 90 வீதம் இறந்தன வென்றும் கூறினர்கள். தற்போதில் இலக்ஷம் மாடுகளுக்கு ஒரு உத்தியோகஸ்தர் வீதம் மாட்டு வைத்திய உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருப்பது போதாது. கவர்மெண்டார் நம்முடைய மாஹாணத்திலேயே சீரம் தயார் செய்கிற சாலை ஒன்றை அமைக்க வேண்டும்.

ஸ்ரீமான் அரங்கஸாமி ரெட்டியார் பின்பு பேசினர். அவர் சொன்னதாவது: சென்ற வருஷத்தில் வட ஆர்க்காடு ஜில்லாவில் மாட்டு நோயால் நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்தன. சீரம் கிடைக்கவேயில்லை. கவர்மெண்டார் மாட்டு வைத்திய சம்பந்தமாக சுதேச வைத்திய முறைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். பிறகு, ஸ்ரீமான்கள் ஷெட்டி, டி. எஸ். இராமஸாமி ஐயர் ஏ. அரங்கனாத முதலியார் மேற்கூறிய அபிப்பிராயங்களின் படியே பேசினர்கள்.

பிறகு, கனம் பி. டி. ராஜன் கூட்டுறவு இலாகா நிமித்தியமாக செலவு திட்டத்தில் 11,92,400 ரூபாய்கள் பகுக்கப்பட வேண்டுமென்று பிரேரேபித்தார். ஸ்ரீமான் டி. ஒ. இராமலிங்கம் செட்டியார் இது சம்பந்தமாகப் பேசியதாவது. கூட்டுறவு இயக்கம் நம்முடைய மாஹாணத்தில் 25 வருஷ காலமாக நடந்து வந்த பிறகு இப்பொழுது அதற்கு ஏதோ கெடுதி வரும் போல் காண்கிறது. கவர்மெண்டார் பொருளாதார வழியில் நிறம்பப்பாடு படுகிறார்கள். அவர்கள் ஜில்லா பாங்கிகளுக்குப் பொருள் உதவி செய்ய முன் வந்திருப்பது புகழத்தக்கது. கூட்டுறவு சங்கங்களுக்கு வந்திருக்கிற கஷ்டங்களெல்லாமே சீக்கிறத்தில் நீங்கி விடக்கூடும். ஆனபோதிலும் கவர்ன்மெண்டார் கூட்டுறவு இலாகாவிலிருந்து விலக உத்தேசிக்கிறது பிசகு. கூட்டுறவு இயக்கம் கவர்மெண்டு இலாகாவாக விருக்கக்கூடாதுதான். ஆனால் அது சுய அதிகார இலாகாவாக விருக்க வேண்டு மென்பது சரியான அபிப்பிராயமாயினும் கவர்மெண்டார் அவ்வியக்கம் நன்றாய் நடை பெறுவதற்கு வேண்டியதக்க மேல்ப்பார்வை உத்தியேகஸ்தர்களையும் தணிக்கை உத்தியோகஸ்தர்களையும் ஏற்படுத்துவதற்காகப் பணச்சிலவை யேற்றுக்கொள்ள வேண்டும். சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய ஆடிடர்களைத் தாங்களே நியமிக்கக்கூடாது. கவர்மெண்டார்தான் ஆடிடர்களை நியமிக்கவேண்டும். பொருளாதார வழியில் சங்கங்கள் மேல் மேலும் அதிகரிக்க வேண்டும். மற்ற வழிகளில், கூட்டுறவு சங்கங்கள் இன்னும் ஏற்படவில்லை. திருவல்லிக்கேணி கோ ஆபரேடிவ் ஸ்டோரைப் போன்ற சங்கங்கள் அதிகமாக ஏற்படவேண்டும். பொருளுற்பத்தி செய் வோருக்கும் அவைகளை யுபயோகிப்பவர்களுக்கும் நன்மைகளை



விளைக்கக்கூடிய சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட சங்கங்கள் விலை வாசிகளை நன்றாய் ஆராய்ந்து அறியக்கூடும், சரக்குகள் எந்த எந்த இடங்களிலும் எந்தெந்த காலங்களிலும் சௌகரியமாகக் கிடைக்கு மென்பதையும் அவைகள் அறியக்கூடும். மேற் கூறிய விதச் சங்கங்கள் ஏற்படாவிட்டால் நெசவுக்காரர்களின் சங்கங்கள் அழிந்து போய் விடும். ஒரு மார்கெடிங்கு ஆபீஸர் ஏற்படுத்தப்பட வேண்டும். பல இடங்களில் நெசவுக்காரர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். நெசவுக் கூட்டுறவு சங்கங்கள் அதிகமாக உண்டாகுமேயாகில் அவர்களுக்கு வேலையேற்படும். லாண்டு மார்டுகேஜ் பாங்கிகளுக்கு டெபென்ச்சர் அதிகாரம் இருந்தால் ஒழிய அவைகள் திருப்திகரமாக வேலை செய்ய மாட்டா. ஸ்ரீமான் டி. எஸ். இராமசாமி ஐயர் இதன் பிறகு பேசினர். அவர் சொன்னதாவது: சில வருஷங்களுக்கு முன் காடேஜ் இண்டஸ்டிரிஸ் ஸொஸைடி என்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது, கவர்மெண்டார் அதற்கு ஒத்தாசை செய்தார்கள். அதைப்போன்ற சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## வர்த்தமானக் குறிப்பு.

மத்திய மாஹாண கவர்மெண்டின் வியவஸாய இலாகாவானது மாட்டுச் சாணி எருவையும் சாணிச்சாம்பல் எருவையும் பயிருக்கு உபயோகித்துப் பார்த்தது. பச்சைச்சாணி உபயோகிக்கப்பட்ட பயிரின் மாசூல் சாணிச் சாம்பல் உபயோகிக்கப்பட்ட பயிரின் மாசூலைவிட மூன்றிலொரு பங்கு அதிகமாயிருந்ததாம். ஆகவே, சாணிமுட்டை எரிக்கப்பட்டால் அதின் எருவம்சம் குறைகிறதென்பது ஏற்படுகிறது. நம்முடைய மாஹாணத்தில் ஜனங்கள் சாணியை முட்டைத்தட்டி விரகாக உபயோகிப்பதால் எருவிற்குச் சாணியே அகப்படுகிறதில்லை. கவர்மெண்டார் விரகு சௌகரியத்தை பஞ்சாயத்துக் காடுகளின் மூலமாக கிராம ஜனங்களுக்கு உண்டாக்கியிருக்கும் பொழுது கிராம ஜனங்கள் சாணியை முட்டைத்தட்டி விரகாக உபயோகிக்க கூடாது. அதையெல்லாம் அவர்கள் பயிருக்கே உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

x x x x x x x

பொம்பாய் மாஹாணத்தில் பருத்தி, பழங்கள், காய்கறிகள், வெல்லம், மிளகாய், புகையிலை, வெங்காயம், மாம்பழம், நெல், பாக்கு இவைகளை வாங்கிக் கொள்ளவும் விற்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இயந்திரங்கள், கருவிகள் முதலியவைகளை விற்கவும் கூட்டுறவு சங்கங்களிருக்கின்றன. மாட்டு அபிவிருத்தி முயர்ச்சிகளுக்காகவும் சங்கங்களிருக்கின்றன. சென்னையில் ஏற்பட்ட விலைக்குறைவு விஷய ஆராய்ச்சி கம்மிட்டி

யார் நம்முடைய மாகாணத்தில் இவ்வகைச் சங்கங்கள் ஏற்பட வேண்டுமென்றே அபிப்பிராயம் சொன்னார்கள்.

x x x x x x x

சென்னை பூமி ஸாஸ்திர சங்கத்தின் இரண்டாவது வருஷாந்திர மகாநாடு மேமீ 20உ பாலக்காட்டில் நடைபெற்றது. சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் ஆசிரியராக விருக்கும் ஆசிரியர் வி. இரங்காச்சாரியார் எம். ஏ., எல். டி., அவர்கள் அக்கிராஸனம் வகித்தார். "ரூரல் இந்தியா" பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீமான். ஏ. சுவாமிநாத ஐயர் அவர்கள் "மலையாளத்து வயல்" என்கிற விஷயத்தைப் பற்றி ஒரு வியாஸத்தை அச்சபைக்கு அளித்தார். அவ்வியாஸம் நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

x x x x x x x

சென்னை பூமி சாஸ்திர சங்கத்தைச் சேர்ந்தவும், சைதாப்பேட்டை டீச்சர் ஸ்காலேஜில் ஆசிரியராகவுமிருக்கிற ஸ்ரீமான் என். சுப்பிரமணிய ஐயர் எம். ஏ., எல் டி., அவர்கள், இங்கிலாந்தில் ராயல் பூமி சாஸ்திர சங்கத்தில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். இந்த கௌரவம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. ஸ்ரீமான் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் நமது பத்திரிகைக்கு பூமி சாஸ்திர விஷயங்களில் வெகு சிறந்த வியாஸங்களை எழுதியிருக்கிறார். அவருக்கு இந்த கௌரவம் கொடுக்கப்பட்டதைப் பற்றி நாம் ரொம்பவும் சந்தோஷமடைகிறோம்.

x x x x x x x

இரங்கூன் இராமகிருஷ்ண மிஷனின் தலைவராகிய சுவாமி சியாமாநந்தஜீ அவர்களுக்கு மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்கள் கெய்சாரி ஹிந்து மெடலை அளித்தார். சுவாமி சியாமாநந்தஜீ அவர்கள் பர்மாவில் பொது ஜன க்ஷேம விஷயமாகவும், இந்தியர்களின் க்ஷேம அபிவிருத்தி சம்மந்தமாகவும் பல வழிகளில் பாடு படுகிறார். இரங்கூனிலிருக்கும் வைத்தியசாலையொன்றே அவருடைய தளராத முயற்சிகளுக்குத் தக்க அத்தாக்ஷியாகும். இராமகிருஷ்ண மிஷனரின் முயற்சிகள் எல்லா விடங்களிலேவுமேயே உயர்வாகவிருக்கின்றன.

x x x x

1929-30-ம் வருஷத்திலும் 1930-31-ம் வருஷத்திலும் மார்ச்சு 31-ந் தேதியோடு முடிந்த அரை வருஷத்தில் கதர் உற்பத்தி, விற்பனை விவரம்.

உற்பத்தி

| | |
|---|---|
| 1929-30ம் நூற்போர்சங்கம் | 2,15756 |
| அத்தாட்சி பெற்றவர்கள் | 525439 |
| மொத்தம் ரூபாய் | 741195 |
| 1930-31 நூற்போர் சங்கம் | 352933 |



| | |
|---|---|
| அத்தாட்சி பெற்றவர்கள் | 762496 |
| மொத்தம் ரூபாய் | 11,15429 |
| கஜக் கணக்கு:— | |
| 1929-30 நூற்போர் சங்கம் | 491235 |
| அத்தாட்சி பெற்றது | 1037325 |
| கஜம் | 1528560 |
| 1930-31 நூற்போர் சங்கம் | 821205 |
| அத்தாட்சி பெற்வர்கள் | 1671395 |
| மொத்த கஜம் | 24,912600 |
| விற்பனை (சில்லரை மாத்திரம்) | |
| 1929-30 நூற்போர் சங்கம் | 296832 |
| அத்தாட்சி பெற்றவர்கள் | 205348 |
| மொத்தம் ரூபாய் | 502180 |
| 1930-31 நூற்போர் சங்கம் | 392940 |
| அத்தாட்சி பெற்றவர்கள் | 382669 |
| மொத்தம் ரூபாய் | 7,75609 |

x x x x x x x

பெண்களில் யார் மிக அழகு என்பதுபற்றிப் பல ஆண்டுகளாக இங்கிலாந்து, ஜர்மனி, அமெரிகா ஆகிய நாடுகளில் போட்டிகள் நடந்து வந்தன. இப்பொழுது ஆண்களுக்கு தசை வந்து விட்டதாகத் தெரிகிறது. மேற்கூறிய தேசங்களில் வாலிபர்களில் யார் மிக அழகு என்பதுபற்றி அமெரிகாவில் சமீபத்தில் ஒரு போட்டி நடக்கப்போகிறதாம். முடிவான போட்டியில் வெற்றி பெறுகிற போகழகருக்கு "மிஸ்டர் யூனிவெர்ஸ்" என்கிற பெயர் கிடைக்குமாம்.

x x x x x x x

சில வாரங்களுக்கு முன் லண்டன் ஆல்பர்ட் ஹாலில் வயது சென்ற பெண்களும் "ஔவை"க் கிழவிகளுமாக 250 பேர் ஒன்றுசேர்ந்து ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டுமிருந்தனராம். அவர்கள் அவ்விதம் செய்வதால் தேகம் வலுவடைந்து அழகும் அதிகரிக்குமாம். சென்ற வருடத்தில் 16 அங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தில் இப்பொழுது 1,300 பேர்களிருக்கின்றனராம். இதை ஸ்தாபித்தவர் 50 வயது சென்ற அழகிய ஸ்ரீமதி பக்ஸ்டாக் என்பவர். இவர் பார்வைக்கு இளம் வயதினராகக் காணப்படுகின்றாராம். இதற்கு லண்டன் முழுவதும் கிளை ஸ்தாபனங்களிருக்கின்றன.

x x x x x x x

பாரிஸ் நகரில் ஒரு கொல்லன் ஓர்விதப் பெட்டிகளைச் செய்து விற்கின்றான். ஒரு பெட்டியின் விலை அணா எட்டு. அப்பெட்டி ஒன்றை வாங்கினால்

எவ்வித நோயும் நீங்கிப் போகுமாம். தினமும் அவனுடைய வீட்டுக்கு ஆயிரக் கணக்கான நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெட்டியை எப்படிச் செய்வதென்று அயன் எவருக்கும் போதிக்கின்றானில்லையாம்.

x x x x x x x

மத்திய அமெரிக்காவில் ஒரு வருஷத்தில் ஆறுமாத மளவும் நாள் தோறும் ஓயாமல் இடி இடிக்குமாம்.

x x x x x x x

சில வால் நட்சத்திரங்கள் பூமியைவிட 31 மடங்கும், சில 150 மடங்கும் பெரியனவா யிருக்கின்றனவாம்.

x x x x x x x

வானத்தினின்று விழும் எரி நட்சத்திரங்களிலிருந்து வெள்ளை வைரங்களும், கறுப்பு வைரங்களும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றனவாம்.

x x x x x x x

நியூயார்க் நகரில் 4500 அழுகுச் சாலைகள் இருக்கின்றன. அவற்றுல் இருபதினுயிரம் பேர் வேலை செய்கின்றார்கள்.

x x x x x x x

இருட்டறையில் படுக்கையில் படுத்துக் கொண்டே புத்தகங்களை வாசிக்கக்கூடிய வெளிச்சந் தரும் மூக்குக் கண்ணுடி யொன்று லண்டன் நகரத்துக் கண் வைத்தியர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார்.

x x x x

## கண்ணுக்குள் வைரம்.

நாகரீக உடை அணிந்திருந்த. பெர்லின் வாசியான புரோ மார்க்கா என்ற பெண் அடிக்கடி ஹாலண்டு நாட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். எம்மெரிச் நகரிலுள்ள சுங்க உத்யோகஸ்தர்கள் அவளைப் பார்த்து சந்தேகம் கொண்டவர்களாய் அவள் நடவடிக்கைகளைக் கவனிக்கலானார்கள். கோலோனில் சட்ட விரோதமாக வைரங்கள் இறக்குமதி செய்பவன் என்று அதிகாரிகள் சந்தேகித்திருந்த ஒருவன் வீட்டிற்கு அவள் எப்போதும் போய் ஒரு நாள் தங்கிவிட்டு வருவதை அவர்கள் கண்டு பிடித்தார்கள். அவளை அவர்கள் சோதனை போட்டுப் பார்க்கும்போது ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியில் ஒரு நாள் அவள் கண்களில் ஒன்று மிக்க பிரகாசமாக விளங்குவதை ஒரு உத்தியோகஸ்தர் தற்செயலாய்க் கண்டார். பரீட்சித்ததன் பேரில் அது கண்ணுடியால் செய்த ஒரு பொய்க் கண்ணென்றும், அதன் பின்னுல் 30,000 பவுன் பெறும்படியான வைரங்கள் இருந்தனவென்றும் கண்டுபிடித்து விட்டார்கள். அதிகாரிகள் அவளை உடனே சிறை செய்தார்கள்.



பொம்பாயிலிருக்கும் பிரேம்ச் சந்துராய்ச் சந்து கம்பெனியார் தங்களுடைய மார்க்கெட் ரிபோர்டு ஒன்றில் கீழே கண்டபடி கூறுகிறார்கள்:—

கரன்ஸி கண்டிரோல்லர் பிரஸுரித்திருக்கும் விவரக்கணக்கின் படி இந்தியாவில் 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தின் கோடியில் சிலாவணியில் 156·53 கோடி ரூபாய் நோட்டுகளும், 122·67 கோடி ரூபாய் வெள்ளி நாணயமும் கட்டி வெள்ளியும் இருந்தன வென்றும், மஹாயுத்தம் தொடங்குவதற்கு முன், அதாவது 1913-14 இல் நோட்டுகள் 6·612 கோடி ரூபாய்களுக்கும், வெள்ளி நாணயமும், வெள்ளிக்கட்டியும் 26·53 கோடி ரூபாய்களுக்கும் இருந்தன வென்றும் அறியப்படுகிறது. ஆகவே, நோட்டுகளும் வெள்ளிக்கட்டியும் நாணயமும் பலமடங்குகளாகப் பெருகி விட்டனவென்று விளங்கும். பொன் மாத்திரம் ஏறக்குறைய அதே அளவில் தான் இருக்கிறது; 1913-14 இல் 35·15 கோடி ரூபாய் பெறுமான பொன் இருந்தது, 1930 இல் 38·15 ரூபாய்ப் பொன்னிருந்தது.

மேற்கூறிய விவரங்களிலிருந்து என்ன ஏற்படுகிறது? கரன்ஸி நோட்டுகளின் சிலாவணி அதிக மாகிக்கொண்டு வருகிறது. அக்காரணத்தினுல் வெள்ளி நாணயங்கள் கவர்மெண்டு கஜானுக்களில் அதிகமாகத் திரும்பி வருகின்றன. இவ்வித சம்பவம் கவர்மெண்டாரின் காஞ்சி ஏற்பாட்டையே கெடுத்து விடும். இப்பொழுது வெள்ளி நாணயங்களின் பேரில் ஜனங்களுக்கு மோஜு இல்லையென்பது நிரூபிக்கப்படுகிறது.

பொன் நாணயங்களுக்குப் பதிலாக வெள்ளி நாணயங்கள் சிலாவணியில் கொடுக்கப்படக்கூடுமாதலால் வெள்ளிநாணயங்கள் அவைகளுடைய வெள்ளியளவின் மதிப்பிற்கு அதிகமாகவே ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மேலும், அந்நிய தேசத்தோடு வியாபார வகையில் வெள்ளி ஒப்புக் கொள்ளப் படுகிறதில்லை. இவ்வித சங்கடங்களிருக் கையிலேயே நம்முடைய தேசத்துக்கு அயல் நாடுகளிருந்து வெள்ளி ஏற்றுமதியாகின்றது. சியம் தேசத்து கவர்மெண்டார் தங்களுடைய இருப்பிலிருக்கிற வெள்ளியில் $1\frac{1}{2}$ கோடி அவுன்சு வெள்ளியை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் போகிறார்களாம். ஆகையால் இந்தியா கவர்மெண்டார் சட்டபூர்வமாக அந்நிய நாட்டு வெள்ளி நம்முடைய தேசத்துக்கு வருவதைத் தடுக்க வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய தேசத்திய வெள்ளி வியாபாரமாகும். காஞ்சிரிஸர்விலுள்ள வெள்ளியானது 5,600, கோடி ரூபாய்க்கு இறங்குகிற வரையில் கவர்மெண்டார் இவ்வித ஏற்பாட்டைக் கைக்கொள்ளவேண்டும்.

x x x x x

நம்முடைய தேசத்தில் ஜபானிய அரிசி பிரபலமாக இறக்குமதியாகிறதைப்பற்றி இந்திய மெர்ச்சண்ட்ஸ் ச்சேம்பர் இந்தியா கவர்மெண்டாருக்கு முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்:—

199404

சில வருஷங்களாக பிரபலமாக ஜபானிய அரிசி நம்முடைய தேசத்தில் இறக்குமதியாகின்றது. அதனால் நம்முடைய தேச வியவஸாயிகளுக்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகின்றன. ஆகையால், கவர்மெண்டார் நம்முடைய தேசத்தில் இனி ஜபான் அரிசி இறக்குமதி யாகாமலிருக்கும்படிக்கு சட்ட பூர்வமான ஏற்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும். இந்தியாவிலும் பர்மாவிலும் விளையும் அரிசி இந்த இரண்டு தேச ஜனங்களுக்கும் வேண்டிய அளவுக்குமேல் பல மடங்கு அதிகமாக விருக்கிறபடியால் ஜனங்கள் அதிகப்பட்ட அரிசியை விற்றுத்தான் தங்களுக்கு ஜீவனத்திற்கு வேண்டிய திரவியத்தை யடைகிறார்கள். ஜபான் தேசத்திலிருந்து இதற்கு முன்பு அரிசியே நம்முடைய தேசத்தில் வரவில்லை. இப்பொழுது இறக்குமதியாகியிருக்கும் ஜபான் தேசத்தரிசியானது அந்த தேசம் இதற்குமுன் பர்மாவிலிருந்து அடைந்த அரிசிதான். ஜபான் தேசத்தார் தங்களுடைய தேச வியவஸாயத்தையும் வியாபாரத்தையும் உயர்த்தி ஸம்ரக்ஷிக்க வேண்டிய நோக்கமாக கப்பல் சௌகரியங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவர்கள் அதிக அரிசியை நம்முடைய தேசத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அப்படி அனுப்பியது நம்முடைய தேசத்தின் கெடுதிக்கே வாய்ந்தது. நம்முடைய தேசத்திலேயே நமக்கு வேண்டிய அளவிற்குமேல் அரிசி இருக்கிறது. ஏற்கனவே குறைந்திருக்கிற அரிசி விலை இக்காரணத்தினால் இன்னும் குறையும். வியவஸாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நஷ்டமேற்படும். இவ்வருஷத்தில் வந்த ஜபான் அரிசி குறைவான விலைக்குக் கொடுக்கப்படாது. அக்காரணத்தினால் நம்முடைய தேசத்து அரிசியின் விலை குறைந்ததோடு நம்முடைய தேசத்து அரிசியின் பெரும்பாகம் விற்பனையாகாமலே இருந்து விட்டது. ஆகவே இந்திய கவர்மெண்டார் இவ்வித வியாபாரக் கோளாறு ஏற்படாமலிருக்கும்படிக்குத் தக்க சட்டங்களை விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

x x x x x x

மஹாயுத்தத்திற்குப் பிறகு ஜர்மனியானது பெரிய கப்பல்களை நிர்மாணம் செய்திருக்கிறது. ஜர்மன் கப்பல்கள் தான் அதிகப் பிரயாணிகளையும் சாமான்களையும் சுமக்கின்றன. அதிகவேகமாகப் போகிற கப்பல்களும் ஜர்மன் கப்பல்கள் தான். இதர தேசங்களுடைய கப்பல் கம்பனிகள் பங்குக்காரர்களுக்கு குறைவான டிவிடெண்டைக் கொடுக்கையில் ஜர்மன் கம்பனிகள் 100க்கு 8 விதம் டிவிடெண்டுக் கொடுக்கின்றன. 1930-ம் வருஷத்தில் ஜர்மனியானது கப்பல் பல விஷயமாக உலகத்திலேயே 4-வது தேசமாக ஆய்விட்டது. பழைய கப்பல்களை யெல்லாம் அது அந்நிய தேசங்களுக்குக் குறைந்த விலைக்கு விற்று விட்டது, வேறே புதிய, நேர்த்தியான, அதிக வலிவுள்ள கப்பல்களைப் புது முறையில் நிர்மாணம் செய்து கொண்டிருக்கிறது. 1930-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் கப்பல்களின் சராசரி நிறை 3074



டன்கள், ஜர்மன் கப்பல்களின் சராசரிநிறையோ 4647 டன்கள். அதின் அதிக வேகமுள்ள கப்பலாகிய பிரமெனின் நிறை 46000 டன்கள். ஜர்மனியில் 431 மோடார் ஷிப்கள் இருக்கின்றன, பிரிடிஷ் எம்பையரிலேயே 300 தான் இருக்கின்றன.

x x x x x x

புங்க எண்ணெய்

புங்கமரத்தை நாம் எங்கும் பார்க்கிறோம். அது நிழலைக் கொடுக்கிறது. அதன் காத்து குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவு மிருக்கிறது. புங்க இலைகள் கழனிகளுக்கு நல்ல எருவாகவாய்கின்றன. புங்கப் புண்ணாக்கும் சாணி எருவோடு கலக்கப்பட்டுப் பயிர்களுக்கு உபயோகிக்கப் படுகின்றன. கிரிஸின் எண்ணெய் கிளம்புகிற வரையில் புங்க எண்ணெய்தான் நமது கிராமங்களில் விளக்குகளுக்கு எண்ணெயாக உபயோகிக்கப்பட்டது. காயங்களுக்கு அவ்வெண்ணெய் சிறந்த மருந்தாக வைத்திய சாஸ்திரம் கூறுகிறது. குழந்தைகளின் அள்ளுமாந்தத்திற்குப் புங்க வேரை உபயோகிக்கிறார்கள். கிரிஸின் தலைப்பட்ட பின்பு எண்ணெய்களின் உற்பத்தியே குறைந்தது. அக்காரணத்தினாலேயே நமது தேசத்திய செல்வ உற்பத்திகளில் பெரும் பாகம் அழிந்து போயிற்று. வங்காளத்திய இண்டஸ்டிரியில் கெமிஸ்டாகிய டாக்டர் ஆர். எல். டட்டா அவர்கள் புங்க எண்ணெய் ஸோப் தொழிலில் நிறம்ப உபயோகிக்கப்படக் கூடிய வஸ்து வென்று ஆராய்ச்சிகளின் மூலமாகக் கண்டுபிடித்திருக்கிறார். ஆகையால் இனிஸோப்பு தொழிலைச் செய்வோர் புங்க எண்ணெயை வேண்டுவர்கள். ஆகையால் பாரஸ்டு பஞ்சாயத்துகள் புங்க மரங்களைப் பிரபலமாக வேலிகளிலும் மற்ற காலி ஸ்தலங்களிலும் வளர்க்க வேண்டுமென்று குறிப்பிடுவோம்.

## கிராம உபாத்தியாயர் விஷயம்.

## குழந்தைப் பயிற்சியும் குழந்தையின் கல்வியும்

அன்பார்ந்த சகோதரர்களே,

நான் உங்களைப் போல் ஒரு எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர். நமது தொழில் மிகவும் உத்கிருஷ்ட மானதென்று எல்லோரும் சொல்லும் பொழுது அவர்கள் நாம் நமது தொழிலில் இன்னும் ஊக்கம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் மென்று நினைப்பு மூட்டுவதாகவே நான் எண்ணுகிறேன். குழந்தைகளின் படிப்பு நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தற்சமயம் நமது தொழிலோ குழந்தைகளின் படிப்புடன் நிற்காமல் மற்றும் கிரா

மத்திலேயே ஞான ஒளியை பிரகாசிக்கும் படியான ஒரு முயற்சியிலும் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. படிப்பு ஐந்து வயதுக்குத்தான் வருகிறது என்பது சரியானகொள்கையல்ல. குழந்தைக்கல்வி ஜனன கால முதலே உற்பத்தியாகிறது. ஆனால் நமது கண்ணுக்கு ஸ்பஷ்டமாகப் புலப்படவில்லை. 3 வயது குழந்தைகளுக்கு நாம் எவ்வளவோ விஷயங்கள் சொல்லிக்கொடுக்கமுடியும். சொல்லிக் கொடுப்பதென்றால் 1, 2, 3. அ, ஆ முதலியவைகள் அல்ல. குழந்தையின் கல்வி, பயிற்சி இவைகளைப்பற்றி நமக்கு அதிகம் பொறுப்பு இல்லாவிடினும், நமது குழந்தைகளைப் பழக்கவும் கிராமத்துக் குழந்தைகளை முன்னுக்குக் கொண்டுவர பெற்றோர்களுக்கு நம்மால் ஆனதை எடுத்துச் சொல்லவும் நாம் கடமைப் பட்டவர்கள், இவ்விஷயத்தைப் பற்றி சுருக்கமாக இங்கு சொல்லுவோம்.

மேல்நாடுகளில் சிறு குழந்தைகளைப் பழக்குவதற்கு பெரும்பாலும் முயற்சி செய்து வருகிறார்கள். புரோபல் என்னும் ஜெர்மானியர் கிண்டர் கார்டன் முறையைக் கண்டு பிடித்தார் தற்சமயம் எங்கு பார்த்தாலும் அம்முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மாண்டிஸரி என்னும் சீமாட்டி இடாலி தேசத்துக் குழந்தைகளுக்கு அரும்பாடு பட்டு வருகிறாள். அவளது முறையைப்பற்றியும் பேசாதவர்கள் கிடையாது. நமது நாட்டில் நமது குழந்தைகளுக்கு ஏற்றமுறையை நாம் கண்டுபிடிக்க வேண்டுவது அவசியம். நமது முன்னோர்கள் பெரியோர்கள் நம்மையும் நமது வீட்டுக் குழந்தைகளையும் எப்படி வளர்த்து வந்தார்கள் என்று கண்டறிவது நமது கடமை. வீட்டிலுள்ள பெரியோர்கள் குழந்தைகளுக்கு வேடிக்கையான பாட்டும் கதைகளும் சொல்லுவது வழக்கம்.

(உதாரணம்)
1. கொழு கொழு கன்றே கன்றின் தாயே.
2. வால் போச்சு கத்தி வந்தது டம் டம்.
3. கதை கதையாம் காரணமாம்.
4. நிலா நிலா வா வா.
5. காக்கா காக்கா எங்கே போனாய்?
6. கை எங்கே? காக்கா கொண்டு போச்சு முதலியவைகள்.

இக்கதைகளும் பாட்டுகளும் குழந்தைகளுக்கு இன்பம் புகட்டுவதுமன்றி பேசும் திறமையையும் ஞாபக சக்தியையும அபிவிருத்தி செய்கின்றன. மேலும் குழந்தைகளை கோயிலுக்கு அழைத்துச் சென்றும், கத்தும் சமயத்தில் அழுகையை மாற்றி வெளியில் அழைத்துச் சென்று வேடிக்கையாக பொழுது போக்குவதுமுண்டு. பேசத்தெரிந்த குழந்தைகளுக்கு விநாயகர் ஸ்தோத்திரம், ஸரஸ்வதி ஸ்தோத்திரம் முதலியவைகளைச் சொல்லிக் கொடுப்பதும் வழக்கம். இவைகளை நாம் நமது குழந்தைகளுக்கும் இளமையிலேயே கற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். கிறிஸ்தவர்கள், மகம்மதியர்கள் தங்கள் தங்கள் மதசம்பந்தமான பாட்டுகளைச் சொல்லிக் கொடுக்கலாம்.

மேல் நாடுகளில் அனுசரித்து வரும் முறைகளை நாம் பத்திரிகைகள், புஸ்தகங்கள், மாத சஞ்சிகைகள மூலமாய் தெரிந்து கொள்ளுவது நலம். குழந்தைகள் இயற்கை விநோதங்களைக் கண்டு களிக்கும்படி செய்ய வேண்டும். வெளியில் அழைத்துச் சென்றால் "திருஷ்டி தோஷம்" வந்துவிடும் என்பது பிசகான கொள்கை. வீட்டை விட்டு வெளியே வந்து நல்ல காற்று



உட்கொண்டு ஓடி யாடி விளையாடுவது முக்கியம். தேகப்பயிற்சியும் மனோ பயிற்சியும் சேர்ந்தே கவனிக்கப்பட வேண்டும். குழந்தைகளை கேவலம் பொம்மைகளாக மதித்து கொண்டாடுவது மாத்திரம் போதாது, எவ்வளவோ தபஸ் செய்து விரதங்கள் இருந்து நமக்கு கடவுளால் கொடுக்கப்படும் ஒரு விலையில்லாத மாணிக்கமாகிய குழந்தையின் மனோவளர்ச்சியைக் குறித்தும நாம் அரும்பாடு படவேண்டும். குழந்தையின் கண்ணைத் திறக்க வேண்டியது பெற்றோர்கடமை. அதாவது ஞானக்கண். உலகத்திலுள்ள அற்புதங்களை அக்குழந்தை நேரில் கண்டறிந்து அவைகளைப் பற்றி யோசிக்கும்படி செய்யவேண்டும்.

குழந்தைக்கு காலும் கையும் சும்மா இருக்கிறதில்லை என்று பெரும்பாலர் கோபிப்பார்கள். குழந்தையின் இயற்கையே அது. அதைஎப்படி தடுக்கமுடியும். அந்தமாதிரி ஒரு செய்கையை நல்லமார்க்கத்தில் திருத்துவது நமது கடமை. தென்னங்குரும்மைகள் ஈர்க்குச்சிகள், நுணாக்காய் முதலியவைகளைக்கொண்டு தேர் சப்பரம் கட்டுகிறதும், காலி நெருப்பு பெட்டிகளைக் கொண்டு வீடு, தோட்டம், முதலியவை கட்டுவதும் குழந்தைகளுக்கு இன்பத்தைத்தரும். அம்மாதிரி செய்வதில் காலும் கையும் ஒரு வேலையில் ஊக்கமாக இருக்கும். சில கட்டைகள் மணிகள் குச்சிகள் கொடுத்து "கிண்டர்கார்டன் விளையாட்டுகளும் வேலைகளும்" என்பன போன்றவற்றை வீட்டில் இளங்குழந்தைகளுக்கு அனுசரிப்பதே நல்லது.

"மணலைக்கண்டால் விடேன் என்கிறான், தண்ணீரைக்கண்டால் விடேன் என்கிறான்" என்று நாம் சொல்லுவது வழக்கம். தண்ணீர் மணல் இவைகளில் அளைவது குழந்தைக்கு வேடிக்கை. அதனால் கெடுதல் வராமல் நன்மை உண்டாகவேண்டுமானால் நாம் அவ்விளையாட்டுகளை நன்மையான விஷயத்தில் திருப்ப வேண்டுவது அவசியம். செடிகளுக்கு தண்ணீர் ஊற்றச் சொல்வதும, நல்ல மணலில் நமது எதிரில் விளையாடச் சொல்லுவதும் குழந்தைக்கு இன்பத்தைத்தரும், புல் நட்டு தோட்டம் போடுதல், கிணறு கட்டுதல் கிளிக்கூண்டு, மலை, வீடு இவைகளும் கட்டி விளையாடுவது நல்லது, விளையாடும் பொழுது நாமும் அவனுடன் தோழன் போல் பேசி விளையாடிக் கொண்டு இருப்பது மிகவும் உற்சாகத்தைத்தரும். 5வயது வரையில் குழந்தைகளை ராஜனைப்போல் வளர்க்க வேண்டும் என்பது நீதி சாஸ்திரம்.

குழந்தை "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல்" என்பது வாஸ்தவமே. முக்கியமாக இளமையில் நல்ல பழக்கங்களை கற்பிக்கவேண்டும். "இளமைப் பழக்கம் சுடுகாடு மட்டில்" என்பது பழமொழி. ஆகவே குழந்தையானவன் எப்படி வளர வேண்டும், எந்த நற்பழக்கங்களை அனுஷ்டிக்க வேணடும் என்று நாம் விரும்புகிறோமோ அம்மாதிரியே நாமும் நமது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து நாம் வாயில் வந்தபடி திட்டினால் நமது குழந்தையும் அப்படியே செய்யும். ஏழைகளிடத்தில் இரக்கம்என்பது எப்படிவரும். அப்படிக் கன்னியில் குழந்தையைக் கொண்டே ஒரு தம்படி, அல்லது ஒரு பிடி அரிசி அந்த பிச்சைக்காரனுக்கு போடச்சொன்னால் அது எவ்வளவோ மேன்மையாயிருக்குமல்லவா? பூச்சாண்டி என்கிற பயம் போகும். பிறருக்கு தன்னால் இயன்ற வளவி கொடுக்க வேண்டும் என்பதும் விளங்கும். ஆகவே நாமே இன்சொல்லைச் சொல்லிக்காட்ட வேண்டும். நாம் அவனை சுத்தமாக இருக்கும்படிப் பழக்க வேண்டும். பல் தேய்ப்பது, குளிப்பது அழுக்கு இல்லாமல் இருக்கிற

இடத்தில் உட்காருவது விளையாடுவது, உடுப்பு, சாமான்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுவது முக்கிய விஷயங்கள். ஒரு துளி காயம் பட்டவுடன் அதிகமாக உபசரணை செய்யாமலிருந்தால் குழந்தைகளுக்கு தைரியம் உண்டாகும். திருஷ்டி தோஷம் என்பதைப் பாராட்டாமல் வெளியில் அழைத்துச்சென்று உலாவி வரவேண்டும், தெய்வபக்தி, பெரியோர்களிடத்தில் மரியாதை, ஜனங்கள் மிருகங்கள் இவர்களிடத்தில் பிரியம், பரோபகாரம் தயை, தைரியம், உண்மை உரைத்தல் முதலிய நற்குணங்களில் பழக்க இளமைப்பிராயமே ஏற்றது.

உபாத்தியாயராகிய நாம் இவ்விஷயங்களை கிராமத்தாருக்கும் பெற்றோருக்கும் சொல்லி வரவேண்டும். குழந்தைகளைப்பற்றி தீவிரமாக நாம் உழைத்து வந்தால் நாம் ஈசுவரனுடைய கிருபைக்கு பாத்திரர்களாக ஆவோம். "பிறர் குழந்தையை பாலூட்டி தாலாட்டி வளர்த்து வந்தால் தன் குழந்தை தானே வளரும்" குழந்தைகள் மூலமாக கிராமத்திலும் நாட்டிலும் ஒற்றுமை ஏற்பட்டு நாடு முன்னேற்ற மடையும். இவ்விஷயத்தைப்பற்றி முக்கியமாக தாய்மார்களுக்கும் நமது சகோதரி உபாத்தியாயர்களும் சொல்லி வருவார்களானால் அவர்களுக்கும் அதிக மேன்மையுண்டு. நமது பள்ளிக்கூடங்களிலும் கூடியவரையில் 3 வயது மேற்பட்ட குழந்தைகளை தக்கவாறு பழக்க இடம், உபகரணம், சௌகரியங்கள் செய்து கொண்டு, சில குழந்தைகளைப் பழக்கி பெற்றோர்களுக்கும் கிராமத்தார்களுக்கும் இம்மேலான காரியத்தில் ஒரு உதாரணமாகக் காட்டவேண்டும். அப்படிக்கில்லாவிடிலும் சற்று நாம் இவ்விஷயத்தில் பாடுபடுவது நல்லது. நமக்கு மூலமந்தரம் என்னவென்றால் "குழந்தைகளுடன் இருந்து குழந்தைகளுக்காகவே நாம் ஜீவிப்போம்" என்பதேயாகும். குழந்தைகள் மூலமாக நாடு தழைத்தோங்குக என்பதே பிரார்த்தனையாகக் கொண்ட தங்களது சிநேகிதனும் ஊழியனுமாகிய

S. ஜெகன்னாதன்.

---

# ஆரோக்கியப் படத்திரட்டு.

· தொகுதி 2, 1930.

சரீராரோக்கிய சம்பந்தமான சித்திரப்படங்கள் பல இதில் அடங்கியுள்ளன. காற்று, ஜலம், ஆகாரம், குழந்தைப் பருவம், தாய்ப் பருவம், தூசு, வியாதி, பிரதம சிகிச்சை, சரீரப் பயிற்சி, ரோக சிகிச்சை, முதலியவைகளைப் பற்றிய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் திருஷ்டி பூர்வமாகவே ஒவ்வொரு புருஷனும், ஸ்திரீயும், மாணவன் மாணவியும் கண்டறிந்து, நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அடைந்து ஆனந்தப்படக் கூடியது. எவனொருவன் திடகாத்திர சரீரத்துடன் ஆரோக்கியமும், தீர்க்காயுளும் அடைய விரும்புவானோ, அவனுக்கு கிளர்ச்சியையும், உற்சாகத்தையும், உபதேசத்தையும் தரக்கூடியது.

ஆரோக்கிய தீபிகையின் சந்தாதாரர்களுக்கு அணா 12. முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

**உடனே அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.**

**...ஜர், "ஆரோக்கிய தீபிகை"**

**..., தம்புசெட்டித் தெரு, சென்னை.**

# SADHANA

## AUSADHALAYA

### DACCA (Bengal)

**—ADHYAKHA—**

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்).

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து. பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒரு சேர் ரூ. 3 0 0

சுக்ல ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ. 16 0 0

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பப்பை வியாதி, அகால மாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5

Regd. No. M. 2475. JUNE 1931. Vol. VI—No. 6

# அம்ருதாஞ்சனம்.

என்றாலென்ன?

தலை நோய், பக்க நோய், கீல் நோய்,

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம் | சைத்யம்

சளுப்பு | மார்சளி

உப்பிசம் | மார் மூச்சு

கழுத்து வலி | ரத்தம் விழுதல்

சந்துவாய்வு | சீழ் விழுதல்




சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்

நோய், செகப்பு, தத்துக்கள், படை

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன்

எல்லா நோய்களையும்

பாதைகளையும்

போக்கும் ! போக்கும் !! போக்கும் !!!

மூன்று விசைகளில் போக்கும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய். & மதரூஸ்

Published by Mr. *A. Rajagopal Reddi*, President, Forest Panchayatdars' Union Ltd. Madras. Printed *AT THE MAGAZINE PRESS LIMITED, CHINGLEPUT.*